**சார்பு நீதிமன்றம், அவிநாசி.**

**முன்னிலை : திரு. C. செந்தில்குமார், B.Com., B.L.,**

**சார்பு நீதிபதி, அவிநாசி.**

2025–ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 28–ஆம் நாள், செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்.126/2023**

**in**

**CNR No.TNTI16-000327-2023**

**கனரா வங்கி , கருவலூர் கிளை,**

**அதற்காக அதன் கிளை மேலாளர் ... வாதி**

**..எதிர்..**

**கமலவேணி, ... பிரதிவாதி**

இவ்வழக்கானது என் முன்பு 22.01.2025 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.E.P.இளவரசு,** அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.K.பொன்னுசாமி,** அவர்கள் ஆஜராகியும், சார்வு செய்யப்பட்டும், பிரதிவாதி ஆஜராகிய நிலையில் வாதி தரப்பு வாதங்களைக் கேட்டறிந்தும், சாட்சியம் மற்றும் ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து வந்த நிலையில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

பிரதிவாதி தொகை விபரத்தில் கண்டுள்ள ரூ.1,53,110.53/–ஐ குறிப்பிடும் காலத்திற்குள் வட்டியுடன் வாதிக்கு செலுத்தும்படிக்கும் மற்றும் வழக்கு செலவுத்தொகை பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு கிடைக்க கோரியும் தவறும்

பட்சத்தில் பிரதிவாதிக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கும் படிக்கும் இவ்வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார்.

2. <u>வாதி வழக்குரையின் சுருக்கம் </u>:–

இவ்வழக்கின் பிரதிவாதி விவசாய கடன் ரூ.1,00,000/– கோரி வாதி வங்கியில் 28.09.2017–ம் தேதியன்று விண்ணப்பம் செய்து 28.09.2017–ம் தேதியன்று வாதி வங்கியால் பிரதிவாதிக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. அதுவகைக்கு பிரதிவாதி தரப்பில் வாதி வங்கிக்கு தபசில் சொத்தை பொறுத்து ஆவணங்கள் கொடுக்கப்பட்டிருந்தது. பிரதிவாதி மேற்படி தொகையை திருப்பி செலுத்தும் வகைக்கு 28.09.2017–ம் தேதியன்று வாதி வங்கியால் உரிமை ஆவணங்களை வங்கியில் வைப்பீடு செய்து அனுமதி கடிதம், கொதுவை ஒப்பந்தம் ஏற்படுத்தி உறுதி ஆவணங்கள் வங்கிக்கு எழுதிக் கொடுத்துள்ளார். ஆனால், பிரதிவாதி வாதி வங்கியிடமிருந்து மேற்படி தொகையை பெற்றுக் கொண்டு, வங்கியில் கடன் தொகையை திருப்பி செலுத்தாமல் இருந்து வருகிறார். தாவா கடன் தொகை 22.02.2023–ம் தேதி வரைக்கு ரூ.1,53,110.53/–ஐ பிரதிவாதியிடமிருந்து வசூல் செய்ய வேண்டி இந்த தாவாவை வாதி வங்கி தாக்கல் செய்ய நேரிட்டது. அதனால், தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

3. இவ்வழக்கில் பிரதிவாதிக்கு இந்நீதிமன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டு, சார்வு செய்யப்பட்டும், பிரதிவாதி முன்னிலையாகாத நிலையில் பிரதிவாதி தோன்றாதரப்பினராக கருதப்பட்டார்.

4. இவ்வழக்கில் வாதி தரப்பில், வாதியின் வங்கி அதிகாரி பிரேம்குமார் வா.சா.1 ஆக, விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் எச்சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு

செய்யப்படவில்லை.

5. **பிரச்சனை:** வாதி இந்த தாவாவில் கோரியபடி வாதிக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதா இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

**தீர்வு:–**

**6.1** இவ்வழக்கானது பிரதிவாதி கடந்த 28.09.2017–ம் தேதியில் பிரதிவாதி ரூ.1,00,000/–ஐ கேட்டு வாதி வங்கியில் விண்ணப்பம் செய்து, பிறகு 28.09.2017–ம் தேதியன்று வாதி வங்கியால் பிரதிவாதிக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. அதுவகைக்கு பிரதிவாதி தரப்பில் வாதி வங்கிக்கு தபசில் சொத்தை பொறுத்து உரிமை ஆவணங்களை வைப்பீடு செய்தும், அனுமதி கடிதம், கொதுவை ஒப்பந்தம் அது குறித்து உறுதி ஆவணங்கள் எழுதி கொடுத்துள்ளார். பிரதிவாதி தான் கடனாக வாங்கிய மேற்படி தொகையை திருப்பி செலுத்தும் வகைக்கு 28.09.2017–ம் தேதி கடன் உறுதி ஆவணத்தையும் வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்துள்ளார். ஆனால், பிரதிவாதி வாதி வங்கியில் மேற்படி தொகையை பெற்றுக் கொண்டு, வாங்கிய கடன் தொகையையும், வட்டியையும் முறையாக திருப்பி செலுத்தாமல் இருந்து வந்ததாகவும், அதனால், வாதி வங்கி தாவா தொகையான ரூ.1,53,110.53/– ஐயும், வட்டியையும், செலவுத்தொகையையும் செலுத்த வேண்டி பிரதிவாதிக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கும் படிக்கும் வாதியால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2** வாதி தனது வழக்கை நிரூபணம் செய்யும் வகையில், வாதியின் வங்கி அதிகாரி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 6 வரையிலான சான்றாவணங்கள் தாக்கல் செய்துள்ளார். வாதி தரப்பு சான்றாவணத்திலிருந்து 28.09.2017–ம் தேதியிட்ட விவசாய கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 28.09.2017–ம் தேதியிட்ட பிரதிவாதி எழுதிக் கொடுத்த விவசாய அனுமானக்கடன் ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 10.03.2020–ம்

தேதியிட்ட உயிர்ப்புக்கடிதம் அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 14.12.2022–ம் தேதியிட்ட உயிர்ப்புக்கடிதம் அசல் வா.சா.ஆ.4 ஆகவும், பிரதிவாதியின் வங்கி கணக்கு நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 22.09.2017 –ம் தேதியிட்ட பிரதிவாதி பெயரிலுள்ள கணினி பட்டா நகல் வா.சா.ஆ.6 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வாதி தரப்பு சான்றாவணத்திலிருந்து கடந்த 28.09.2017–ம் தேதியன்று எழுதிக் கொடுத்த கடன் விண்ணப்பம் மூலம் பிரதிவாதி வாதி வங்கியில் கடன் பெற்றுள்ளார் என்பதும், பிரதிவாதி, வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்த விவசாய அனுமான கடன் ஒப்பந்தம் செய்ததை உறுதி செய்யும் வகையில் 28.09.2017–ம் வா.சா.ஆ.2 –ஐ பிறப்பித்து கொடுத்துள்ளார் என்பதும் ஊர்ஜிதமாகிறது.

**6.3** இந்நிலையில், வாதியின் வழக்கு பொய்யானது என்று சொல்லும் வண்ணம் இந்நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட தாவா சம்மனை பிரதிவாதி பெற்றுக் கொண்டுள்ள போதிலும், பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி இவ்வழக்கினை ஆட்சேபித்து எதிர்வழக்காட முன்வரவில்லை. அதனால் இந்நீதிமன்றமானது பிரதிவாதியை கடந்த 06.07.2024–ம் தேதியில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பிரதிவாதி வாதியின் வங்கிற்கு 28.09.2017–ம் தேதியிட்ட விவசாய கடன் ஒப்புதல் கடிதம் வா.சா.ஆ 1–ஐ எழுதிக்கொடுத்து கடன் பெற்றுக்கொண்டு பின்னிட்டு 28.09.2017–ம் தேதி பிரதிவாதி எழுதிக் கொடுத்த விவசாய அனுமான கடன் ஒப்பந்தம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. இந்த நிலையில், வா.சா.1ன் வாய்மொழி சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ 6 வரையிலான சான்றாவணங்களின் அடிப்படையில் வாதியின் வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனால், வாதி வங்கியானது தாவா கடன் தொகையை பொறுத்து தீர்ப்பாணை பெற அருகர் ஆவார். எனவே, வாதி வங்கி தாவாவில் கோரியவாறு தீர்ப்பாணை கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு

காணப்படுகின்றது.

**முடிவாக,** வாதியின் தாவா அனுமதிக்கப்பட்டு, தாவா தொகையான ரூ.1,53,110.53/– ம், அசல் தொகை ரூ.1,00,000/–க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரையில் 9% வட்டியும் தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரையில் 6% வட்டியும் சேர்த்து பிரதிவாதிகள் 2 மாத கால அவகாசத்திற்குள் வாதிக்கு செலுத்தப்பட வேண்டும் என்று செலவுத்தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 2025–ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 28–ஆம் நாள் அன்று அவையறிய பகரப்பட்டது.

ஒம்.C. செந்தில்குமார்(28.01.25)

சார்பு நீதிபதி,
அவிநாசி.

**வாதி தரப்பில் விசாரிக்கப்பட்விவசாய கடன் விண்ணப்பம்ட சாட்சிகள்:**

வா.சா.1 – பிரேம்குமார் (கிளை மேலாளர்)

**வாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 28.09.2017 | விவசாய பிரதிவாதி எழுதிக் கொடுத்த விவசாய அனுமான கடன் ஒப்பந்தம்கடன் விண்ணப்பம் | அசல் |
| வா.சா.ஆ.2 | 28.09.2017 | பிரதிவாதி எழுதிக் கொடுத்த விவசாய அனுமான கடன் ஒப்பந்தம் | அசல் |
| வா.சா.ஆ.3 | 10.03.2020 | உயிர்ப்புக் கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.4 | 14.12.2022 | உயிர்ப்புக் கடிதம் | அசல் |
| வா..சா.ஆ.5 | – | பிரதிவாதியின் வங்கி கணக்கு | நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.6 | 22.09.2017 | பிரதிவாதி பெயரிலுள்ள கணிணி பட்டா | நகல் |

<u>**பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**</u> இல்லை

ஓம்.C. செந்தில்குமார்(28.01.25)
சார்பு நீதிபதி,
அவிநாசி.

அ.வ.எண்.126/2023

வரைவு/சீரான

நாள்:28.01.2025